DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S. 164 / 2024** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW2** |
| **Name** | : | ஜெயராஜ் |
| **Father's Name** | : | பாலன் |
| **Village** | : | பரப்பாடி |
| **Taluk** | : | நாங்குநேரி |
| **Age** | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 16.10.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் இவ்வழக்கிற்கு 3 ம் நபர். வாதி தரப்பு 2 வது சாட்சிஆவேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் பரப்பாடியில் குடியிருந்து வருகிறேன். வழக்கு 1,2 வாதிகளை தெரியுமா என்றால் தெரியும். வழக்கு 1,2 பிரதிவாதிகளை தெரியுமா என்றால் தெரியும். 1 ம் வாதியையும் 1 ம் பிரதிவாதியும் சகோதரர்கள் என்று எனக்கு தெரியுமா என்றால்தெரியும். 1 ம் வாதிக்கு குழந்தைகள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 குழந்தைகள். 1,2 பிரதிவாதிகள் 1,2 வாதிக்கு 3 ம் வாதியான ஐஸ்வரியா என்பவரை தத்து கொடுத்தது எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

மேற்படி 3 ம் வாதி தத்து கொடுத்தும் நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டேன் என்றால் சரிதான். தற்போது 3 ம் வாதி ஐஸ்வரியா யாருடன் வசித்து வருகிறார் என்றால் 1,2 வாதியுடன் வசித்து வருகிறார். எந்த வருடம் 3 ம் வாதி தத்து எடுக்கப்பட்டார் என்றால் 2019 ம் ஆண்டு.